**மண்முனை தென்எருவில் பற்று பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜூன் 30 ஆம் திகதியன்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 ஜூன் 19 தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் மண்முனை தென்எருவில் பற்று பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய தயாரிப்பதற்கு ஆலோசிக்கப்பட்டுவருகின்றது. |

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் சந்தைக் குத்தகை தொடர்பாக 02 குத்தகையாளர்களிடமிருந்து 2018 காலப்பகுதியில் அறவிட்ட பகுதிப் பெறுவனவு ரூபா 281,063 வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருமானம் நிற்ணயிதயதபடி கணக்கிடப்படல் வேண்டும். | 2018ம் ஆண்டில் சபையின் சந்தைக் குத்தகைகாரரிடமிருந்து பெற்ற பகுதிப் பெறுவனவு ரூபா 281,063 சபையின் வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 1.3.3 ஆவணச்சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 219,327,731 தொகை பெறுமதியான 06 விடயங்களுக்கு காணி உறுதிகள், நிலையான சொத்து பதிவேடுகள், உரிமைப்பத்திரங்கள், மற்றும் மதிப்பிட்டு அறிக்கைகள் போன்ற சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கு மீதிகலை உறுதிப் படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். | காணி கட்டடங்கள் பொறி, மோட்டார் வாகனங்கள் போன்ற நிலையான சொத்துக்களில் சிலவற்றுக்கான சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் ஏனையவற்றுக்கான ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மற்றும் மின்சாரம் விநியோகத்தமை மற்றும் செலவுக்கடன் வழங்குனர் போன்றவை தொடர்பான விபரங்கள் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள்,விதிகள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 இலக்க பொதுநிர்வாகச் சுற்றறிக்கை | சபையில் பணியாற்றும் பணியாட் தொகுதியினருக்காக மனிதவளத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | சபையில் பணியாற்றும் பணியாட் தொகுதியின ருக்காக மனிதவளத் திட்டம் ஒன்று தயாரிக்கப் பட்டிருத்தல் வேண்டும். | சபையில் பணியாற்றும் பணியாட்களுக்கான மனிதவளத்திட்டம் திண்மக்கழிவு முகாமைத்துவ பகுதியில் கடமையாற்றும் ஊழியர்ளுக்கான தனியான மனிதவளத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது அத்துடன் ஏனைய உத்தியோகத்தர்களுக்கா ன மனிதவளத்திட்டம் தொடர்பான பயிற்சிகள் முகாமைத்துவ பயிற்சி திணைக்களத்தினால் வழங்கப்படுவதற்கு அமைய செயற்படுத்தப்படுகின்றது. |

### 1.4.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **பெறவேண்டிய கணக்குகள்** | | |
| | நிதிக்கூற்றுக்களில் நிலுவையாக உள்ள மின்சாரக் கடன்கள் ரூபா 1,656,338 தொகை தொடர்பில் தொடர்ச்சியாக 10 ஆண்டுகளுக்கு மேலாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ள போதிலும், அவை தொடர்பான ஆவணங்கள், பதிவேடு மற்றும் உறுதிப்படுத்தக்கூடிய சான்றுகள் எதுவுமின்றி கணக்குகளில் காட்டப்பட்டு வருவதுடன் நிலுவைகளை அறவிட அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நிலுவைகளை அறவிட அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். | பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்ட மின்சாரக் கட்டணம் தொடர்பான தகவல்களையும் மின்சார சபைக்கு வழங்கப்பட்ட முற்பணம் தொடர்பான பதிவேடுகள் விபரங்கள் இல்லாமையினால் அவற்றினை அறவீடு செய்வதற்கோ அல்லது ஏடுகளில் இருந்து பதிவழிப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள முடியாதுள்ளது. |
| **(ஆ)** | **செலுத்த வேண்டிய கணக்குகள்** | | |
| (i) | நிதிக்கூற்றுக்களில் கடன் பெறுப்பாக காட்டப்பட்டுள்ள செலவுக் கடன் வழங்குனர் ரூபா 406,537 மற்றும் மின்சாரம் வினியோகித்தமைக்காக கடன் ரூபா 2,069,410 தொகைகள் ஐந்து வருடங்களுக்கு மேலாக இணங்கண்டு அவற்றை தீர்ப்பதற்கு அல்லது அவற்றை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகள் தீர்ப்பதற்கு அல்லது அவற்றை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். | நிதிக்கூற்றுக்களில் கடன் பொறுப்பாக காட்டப்பட்டுள்ள செலவுக்கடன் வழங்குநர் ரூபா 406,537 மற்றும் மின்சாரம் விநியோகத்தமைக்கான கடன் ரூபா 2,069,410 தொகை 05 வருடங்களுக்கு மேலாக இனங்கண்டு அவற்றை தீர்ப்பதற்கு அல்லது அவற்றை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | வைப்புக் கணக்கில் 04 வருடங்களுக்கு மேலாக காணப்படும் 16 ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்படவேண்டிய பிடிகாசு ரூபா 172,529 தொகையை கொடுத்துத் தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிடிகாசு தொகையை கொடுத்துத் தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். | சபையின் வைப்புக்கணக்கில் 04 வருட காலமாக பிடித்து வைக்கப்பட்டுள்ள ஒப்பந்தகாரருக்கான பிடிகாசு தொகையினை மீளளிப்பதற்கு அல்லது அதனை வருமானத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 38,793,420 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 20,586,408 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 18,000 | 2,024,650 | 1,888,890 | 396,609 | 1,200,000 | 1,828,310 | 1,828,310 | --- |
| வாடகைகள் | 18,244,200 | 22,170,000 | 21,632,495 | 4,342,056 | 15,174,400 | 18,556,129 | 14,753,576 | 3,802,553 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,200,000 | 2,374,450 | 2,374,450 | - | 1,250,000 | 2,412,093 | 1,617,020 | 795,073 |
| ஏனைய வருமானம் | 21,535,000 | 46,573,750 | 40,786,143 | 25,905,721 | 62,955,640 | 45,988,563 | 36,178,461 | 9,810,102 |
| மொத்தம் | 41,997,200 | 73,142,850 | 66,681,978 | 30,644,386 | 80,580,040 | 68,785,095 | 54,377,367 | 14,407,728 |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நீண்ட காலமாக காணப்படும் வாடகைகள் மீதான நிலுவை ரூபா 3,802,553 தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாடகை நிலுவைகள் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். | பதிவழிப்பது தொடர்பாக உள்;ராட்சி உதவி ஆணையாளரின் ஆலோசனையை பெற்று குழு ஒன்று நியமிக்கப்பட்டு பதிவழிப்பது தொடர்பாக தீர்மானம் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. |

**2.2.3 ஏனைய வருமானங்கள்**

**2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைத் தீர்வைகள்**

**முத்திரை தீர்வைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் தொடக்கம் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான மற்றும் 2019 ஆம் ஆண்டு சனவரி தொடக்கம் திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குரிய முத்திரைத் தீர்வைகள் பிரதேச சபையினால் பதிவாளர் நாயகத்திடமிருந்து உரிய காலத்திற்குள் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடந்த மற்றும் மீளாய்வாண்டு வருமானங்கள் அறவிடப்பட்டிருத்தல் வேண்டும். | 2019ம் ஆண்டு 03 காலாண்டுக்கான விபரங்கள் திரட்டப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நான்காம் காலாண்டுக்கான விபரம் 2020 இல் கிடைக்கப்பெற்றுள்ளது. இவ்வாறான காலதாமதங்களினால் விரைவாக பெற்றுக் கொள்ளமுடியாதுள்ளது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி இலக்கு<br>2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அடைந்து கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுத்திருத்தல் வேண்டும். | குறித்த நோக்கத்திற்காக செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.2.1 சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தாமை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அசையும் மற்றும் அசையா சொத்துக்களை நிலையான சொத்துப் பதிவேடுகளில் பதிவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துப் பதிவேடுகளில் பதிவதற்கு நடவடிக்கை எடுத்திருத்தல் வேண்டும். | மீளாய்வாண்டின் இறுதியில் காணி கட்டடங்களின் ஏறக்குறைய 60% மானவை வீதிகளை புனரமைப்பு செய்வதன் ஊடாக ஏற்படும் மூலதன செலவினை உள்ளடக்கியுள்ளது. ஏனையவை காணி கட்டடங்களின் |

| | | |
|---|---|---|
| | | பெறுமதியாகும். எனவே அவற்றினை நிலையான சொத்துப் பதிவேடுகளில் தனத்தனியாக பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. |

**3.2.2 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்கள் மீதான பராமரிப்பு மற்றும் திருத்தங்கள் தொடர்பில் சபைக்கு சொந்தமான வக்கோ லோடர், கலிவவுசர், உழவு இயந்திரம், சிறிய ரக உழவு இயந்திரம், மற்றும் Motor Grander இயந்திரம் போன்றவை 03 ஆண்டுகளுக்கு மேலாக திருத்தம் செய்யக்கூடிய அல்லது திருத்தமுடியாத நிலையில் காணப்படுகின்றது. இவற்றை திருத்துவதற்கு அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திருத்துவதற்கு அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். | சபையில் காணப்படும் சொத்துக்களில் திருத்தமுடியாதுள்ள வாகனங்களுக்கான அறிக்கைக்காக இயந்திரப் பொறியியலாளர், கிழக்கு மாகாணம் அவர்களுக்கு அவற்றினை பார்வையிட்டு அறிக்கை தருமாறு கோரப்பட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எனவே பொறியியலாளரது அறிக்கை கிடைத்தவுடன் திருத்துவதற்கு அல்லது விற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. |

**3.3 பெறுகை**

**3.4.1 பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வழங்கல்களுக்காக ஒரு பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | ஒரு பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும், | தொடர்ந்து வரும் ஆண்டுகளில் மேற்கூறப்பட்டவற்றுடன் உள்;ராட்சி மன்ற 4 வருட அபிவிருத்தி திட்டங்களின் முன்மொழிவுகளையும் கருத்திற் கொண்டு சிறப்பாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் சபையில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் நடைபெற்றிருக்கவில்லை | உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் நடைபெற்றிருத்தல் வேண்டும். | தற்போது உள்ளக கணக்காய்வுக்கு பொறுப்பாக பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு உள்ளக கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருத்தல் வேண்டும். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்கள் நடாத்தப் படுவதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. |